ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2413/44 - 2024 දෙසැම්බර් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.12.05

*2413/44 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க தகவல் திணைக்களம்

2025 ஆம் ஆண்டுக்கான
உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டைகளை வழங்குதல்

வெகுசன ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடக தொழில் துறையிலுள்ளவர்களின் அலுவல்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்குத் தேவையான சுதந்திரம் மற்றும் அமைதியான சூழலை உருவாக்குவது அரசின் பொறுப்பாகும். இதற்கமைவாக சிறந்த மற்றும் தரமான வெகுசன ஊடக கலாசாரத்திற்காக அர்ப்பணிப்புடனுள்ள அரசாங்க தகவல் திணைக்களம், ஊடகவியலாளர்களின் தொழில் தரத்தை சிறப்பானதாக மேம்படுத்தி அவர்களது தொழிலின் கௌரவத்தை பாதுகாத்து, கடமைகளை எந்தவித தடையுமின்றி நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் தொழில் ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டையை விநியோகித்து வருகின்றது.

இந்த ஊடக அடையாள அட்டையை வழங்கும் பணியின் போது 'செய்திகள் மற்றும் தகவல்களைத் திரட்டும், கட்டுரையாக்கும், தகவல்களைத் தொகுக்கும், சேகரித்த தகவல்களை அச்சு, இலத்திரனியல் அல்லது இணையதளம் மூலமாக வாசகர்களுக்கு தொடர்பாடல்களை மேற்கொள்பவர்' ஊடகவியலாளராக கருதப்படுவார். ஊடகவியலாளர் அடையாள அட்டை வழங்கப்படுவது இந்த பணிகளில் ஈடுபடும் தொழில் ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு மட்டுமேயாகும்.

இதன் அடிப்படையில் பின்வரும் தொழில் துறையினர்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

I. ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளர்/ இணைப்பாளர் போன்ற நேரடியாக ஊடகவியலுடன் தொடர்பில்லாத பதவிகளை உடையோர்.

II. விளம்பர நிறுவனம், வர்த்தக விளம்பரம் மற்றும் காணொளி (Vedio) தயாரிப்பு நிறுவனம், செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களை செய்தி அறிக்கைப்படுத்தாத ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள்.

III. திரைப்படம்/ தொலைக்காட்சி நாடகம்/ மேடை நாடகம் போன்ற கலைத்துறையில் ஈடுபடுகின்ற கலைஞர்கள்.

1A - G 43197 — 06 (2024/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**01. ஊடக அடையாள அட்டைக்கான, அடையாள அட்டைகளைப் பரிந்துரைப்பதற்கான பொது நிபந்தனைகள்**

I. இந்த ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பப் படிவங்களை பரிந்துரைக்கின்ற போது தமது ஊடக நிறுவனத்தில் பணியாற்றுகின்ற தொழில்துறை ஊடகவியலாளர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களை மாத்திரம் பரிந்துரைப்பதற்கு அனைத்து அச்சு, இலத்திரனியல் மற்றும் இணைய ஊடக நிறுவனத் தலைவர்கள் மற்றும் அவர்களது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகள் அவதானம் செலுத்த வேண்டும்.

II. உங்கள் நிறுவனத்திற்கு உரிய ஊடகவியலாளர்கள்/ஊடகத் தொழில்துறையினரின் விண்ணப்பப்படிவங்களைப் பரிந்துரைப்பதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியொருவரை பெயர் குறிப்பிடுவீர்களாயின், உரிய அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், பதவி, அலுவலக தொலைபேசி இலக்கம், மாதிரி கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரை போன்ற தகவல்கள் 2025ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஊடக அடையாள அட்டைப் பிரிவிற்கு அனுப்பி வைப்பதன் மூலம் ஊடக அடையாள அட்டையை வழங்கும் செயற்பாட்டிற்கு இலகுவானதாக அமையும். அவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரி யாதேனுமொரு காரணத்தினால் மாற்றவேண்டி ஏற்படுமாயின், புதிதாக பெயர்குறிப்பிடப்படுகின்ற அதிகாரியின் தகவல்களை விரைவாக அனுப்பி வைக்குமாறு ஊடக நிறுவனத் தலைவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

III. தமது ஊடக நிறுவனத்தின் ஊடகவியலாளர்/ ஊடகத் தொழில்துறையில் இல்லாத பயிலுனர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவங்களை எக்காரணத்தைக் கொண்டும் பரிந்துரைக்க வேண்டாம். (பயிலுனர்களுக்கு எக்காரணம் கொண்டும் ஊடக அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.)

IV. விண்ணப்பப்படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு இணங்க தயாரிக்கப்பட்ட அட்டவணையில் உங்கள் நிறுவனத்தில் மேற்சொன்ன விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கின்ற ஊடகவியலாளர்கள்/ ஊடகத் தொழிதுறையினர் ஆகியோரின் தகவல்களை உள்ளடக்கியவாறு (அட்டவணை இலக்கம் 01 இணங்க), நிறுவனத்தின் முகவரி அச்சிடப்பட்ட காகிதத் தாளில் (Letterhead) உரிய தகவல்களை உறுதிப்படுத்தி அவர்களுக்கு ஊடக அடையாள அட்டையை வழங்குவதற்கு பரிந்துரைக்கின்றேன் என்றவாறு குறிப்பிட்டு கோரிக்கை கடிதம் உரிய நிறுவனத் தலைவர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரை இடப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு அனுப்பி வைக்கப்படாத அனைத்து விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

| தொடர் இல. | பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | பதவி | பணியாற்றுகின்ற பிரிவு |
|---|---|---|---|---|
| 01 | | | | |
| 02 | | | | |

**(அட்டவணை இலக்கம் - 01)**

V. உங்கள் நிறுவனத்தினால் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கின்ற பிரதேச ஊடகவியலாளர்களின் தகவல்களை உள்ளடக்கியவாறு (அட்டவணை இலக்கம் 02 இணங்க), நிறுவனத்தின் முகவரி அச்சிடப்பட்ட காகிதத் தாளில் (Letterhead) உரிய தகவல்களை உறுதிப்படுத்துவதற்கும், அவர்களுக்காக அடையாள அட்டையை வழங்குவதற்குப் பரிந்துரைக்கின்றேன் என்றவாறு குறிப்பிட்டு கோரிக்கை கடிதம் உரிய நிறுவனத் தலைவர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரை இடப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு அனுப்பி வைக்கப்படாத அனைத்து விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். இங்கு உரிய தகவல்கள் மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறே, இந்தப் பெயர் பட்டியலின் மென்னகல் பிரதி (Soft Copy) media.accre@gmail.com என்ற இலத்திரனியல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (தற்போது செய்திகளை வழங்குகின்ற செயற்பாட்டிலுள்ள நிருபர்களின் பெயர்கள் மாத்திரம் பெயர் பட்டியலில் உள்ளடக்குவதற்கு ஊடக நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி கவனம் செலுத்த வேண்டும்.)

| தொடர் இலக்கம் | பிரதேச ஊடகவியலாளரின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | நிரந்தர முகவரி | ஊடகவியலாளரின் தொலைபேசி இலக்கம் | ஊடகவியலாளர் செய்திகளை சேகரிக்கும் மாவட்டம் மற்றும் பிரதேசம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

**(அட்டவணை இலக்கம் - 02)**

VI. ஊடக அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக ஊடக நிறுவனம் சமர்ப்பிக்கின்ற பெயர் பட்டியல் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான அனைத்துப் பொறுப்பும் அதனை உறுதிப்படுத்துகின்ற ஊடக நிறுவனத் தலைவர் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியையே சாரும். ஊடக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையை உள்ளடக்கிய கடிதத்தை உறுதி செய்பவர் பெயர் பட்டியலின் அனைத்து பக்கங்களிலும் தனது கையெழுத்து மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

VII. இந்த அனைத்து பெயர் பட்டியலுக்கு மேலதிகமாக, அனைத்து விண்ணப்பத்திலும் வெவ்வேறாக ஊடக நிறுவனத் தலைவர் அல்லது அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் தனித்தனியாக கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ பதவி முத்திரை இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

VIII. வருடத்திற்கு ஒரு தடவை மாத்திரமே இந்த ஊடக அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. நிறுவனங்களில் இருந்து அவ்வப்போது சமர்ப்பிக்கின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், அவ்வாறான கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

IX. ஊடக நிறுவனம் பணியிலிருந்து பணி நீக்கம் செய்கின்ற/ விளகிச் செல்கின்ற ஊடகவியலாளரின் அடையாள அட்டை, அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திடம் மீள ஒப்படைப்பது ஊடக நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும். அவ்வாறு ஒப்படைக்கப்படாமல் அதற்கு பதிலாக நியமிக்கப்படுகின்ற வேறொரு நபருக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது என்பதுடன், அவ்வாறான விண்ணப்பப்படிவத்தினை பரிந்துரைக்காதிருக்கின்ற போது ஊடக நிறுவனத்தின் தலைவர் அல்லது அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி கவனம் செலுத்த வேண்டும்.

X. தனிப்பட்ட விருப்பத்தை பூர்த்தி செய்யும் நோக்கில் ஊடக அடையாள அட்டையை பயன்படுத்துவது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றால், அது தொடர்பில் விசாரணை செய்து சம்பந்தப்பட்ட ஊடகவியலாளரின் அடையாள அட்டையை செல்லுபடியற்றதாக்கும் முழுமையான அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தை சார்ந்ததாகும். அவ்வாறான சந்தர்ப்பத்தில், அவ்வாறு செல்லுபடியற்றதாக்கப்பட்ட அடையாள அட்டையை அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவரின் அறிவித்தலுக்கு இணங்க, இரண்டு நாட்களுள் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு ஒப்படைப்பது, அந்த ஊடக அடையாள அட்டையை வழங்குமாறு பரிந்துரைத்த நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியின் பொறுப்பாகும்.

**02. ஊடக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரியினால் அவதானிக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்களும் ஊடக அடையாள அட்டை வகைப்படுத்தலும்.**

I. 2025ஆம் ஆண்டுக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்படுத்தலின் கீழ் இங்கு ஒவ்வொரு அடையாள அட்டை வகைப்படுத்தலுக்கு இணங்க குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின் பிரகாரம் இந்த உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற போது விண்ணப்பதாரிகள் மற்றும் அடையாள அட்டையை பரிந்துரைப்போர் அது தொடர்பாக தனிப்பட்ட அவதானத்தினை செலுத்தல் வேண்டும்.

அ. அலுவலக ஊடகவியலாளர் (Journalist)
ஆ. பிரதேச ஊடகவியலாளர் (Provincial Journalist)
இ. சுதந்திர ஊடகவியலாளர் (Freelance Journalist)
ஈ. வெளிநாட்டு ஊடகவியலாளர் -தற்காலிகம் (Foregion Journalist - Temporary)
உ. ஊடக நிர்வாகி (Media Administrator)
எ. தொழில்நுட்ப கலைஞர் (Technical)
ஏ. ஊடக சேவை (Media service)

II. யாதேனுமொரு ஊடக நிறுவனமொன்றிற்காக செல்லுபடியாகும் காலம் முடிவுறுத்தப்படாத உத்தியோகபூர்வ அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டுள்ள ஊடகவியலாளர்கள்/ ஊடக தொழில்துறையினர் அந்த அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊடக நிறுவனத்திலிருந்து பணியிலிருந்து நீங்கினால்/ நீக்கம் செய்யப்பட்டால் அந்த உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டையை அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைத்தன் பிற்பாடு

மாத்திரம் அந்த நபருக்கு பிரிதொரு ஊடக நிறுவனத்திற்கான அல்லது சுதந்திர வெகுசன ஊடகவியலாளராக புதிய அடையாள அட்டை வழங்கப்படும். அவ்வாறான ஊடகவியலாளர்/ ஊடகத் தொழில்துறையினர் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கின்ற போது இவ்விடயம் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

III. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊடக நிறுவனத்தில் நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படையில் வெகுசன ஊடகவியலாளர்/ ஊடகத் தொழில்துறையினராக ஆகக் குறைந்தது 06 மாதங்களுக்கும் அதிகமான காலம் பணியாற்றுகின்றவர்கள் மாத்திரம் இந்த உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். (பயிலுனர்கள் மற்றும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.)

IV. அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பப்படிவத்துடன் தமது உத்தியோகபூர்வ அலுவலக அடையாள அட்டையின் பிரதியொன்றும் தேசிய அடையாள அட்டை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணக் கடவுச் சீட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி மற்றும் தனது நிறுவனத் தலைவரினால் தனது பெயர், பதவி மற்றும் ஊடக நிறுவனத்தின் பெயர் கொண்ட உத்தியோகபூர்வ பதவி முத்திரையிடப்பட்டு தமது கையொப்பத்துடன் உறுதிப்படுத்தி முன்வைக்கப்பட வேண்டும். (அவ்வாறே, தேவையேற்படின், யாதேனுமொரு விண்ணப்பதாரியின் உத்தியோகபூர்வ அலுவலக அடையாள அட்டையை பரிசீலிக்கும் அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியைச் சார்ந்தாகும்.)

V. அலுவலக அடையாள அட்டையை சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரரின் நிறுவனத் தலைவரினால் தனது பெயர், பதவி மற்றும் ஊடக நிறுவனத்தின் பெயருடன் உத்தியோகபூர்வ பதவி முத்திரையிட்டு தமது கையொப்பத்துடன், சான்றுப் படுத்தப்பட்ட நியமனக்கடிதத்தின் பிரதியொன்று சமர்ப்பிக்க வேண்டும்.

VI. விண்ணப்பப் படிவத்தின் அனைத்துப் பகுதிகளும் தெளிவான கையெழுத்தில் அல்லது அச்சிடப்பட்டு சரியாக பூரணப்படுத்தப்பட வேண்டும். தெளிவில்லாத, பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், ஊடக அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பெயர் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் மீளவும் முன்வைக்கப்பட வேண்டும்.

VII. விண்ணப்பிக்கும் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் எடுக்கப்பட்ட மற்றும் எவ்விதத்திலும் (Edit) திருத்தப்படாத 1x1 ½ ( 2.6 செ.மீ. x 3.7 செ.மீ.) அளவிலான தெளிவான நிறப் புகைப்படம் இரண்டு விண்ணப்பப் படிவத்துடன் முன்வைக்கப்பட வேண்டும். அதில் ஒரு புகைப்படம் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட்டிருக்க வேண்டும். அடுத்த புகைப்படம் சேதமடையாதவாறு ஒரு உறையில் இட்டு விண்ணப்பத்தில் இணைக்கப்பட வேண்டும். அரசாங்க தகவல் திணைக்கள ஊடக அடையாள அட்டைப் பிரிவு எதிர்பார்க்கின்ற தரத்திலான புகைப்படங்கள் இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். குறிப்பிட்ட அளவிற்கு உட்படாத மற்றும் தெளிவற்ற விதத்திலான புகைப்படங்கள் கொண்ட விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

VIII. கௌரவப் பெயர் மற்றும் கல்வித் தகைமைகள் ஊடக அடையாள அட்டையில் குறிப்பிடப்பட மாட்டாது. ஊடக அடையாள அட்டையில் ஊடகவியலாளரின் பெயர் மற்றும் தொழில் தகவல் மாத்திரமே குறிப்பிடப்படும்.

IX. புனைப் பெயர்களில் செய்திகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள்/ நிகழ்ச்சிகளின் திரையாக்க ஊடகவியலாளர்களின் புனைப் பெயர்களில் ஊடக அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.

X. இந்த ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கின்ற போது 03ஆவது பந்தியிலுள்ள விடயம் தொடர்பில் அதிக கவனத்தினைச் செலுத்தி தமக்கு உரியதான அடையாள அட்டை வகையினை அறிந்து கொண்டு அதற்கு ஏற்றதான விண்ணப்பப்படிவத்தினை மாத்திரம் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் தனது கவனத்தை செலுத்த வேண்டும். உரிய மாதிரிக்கு இணங்க சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**03. ஒவ்வொரு வகைப்படுத்தலுக்குமான ஊடக அடையாள அட்டையை வழங்குவதற்கு உரியதான நிபந்தனைகள், விண்ணப்பிக்க வேண்டிய விதம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய மேலதிக ஆவணங்கள்**

**(அ) அலுவலக ஊடகவியலாளர்கள் (Journalist)**

I. அச்சு (பத்திரிகை, சஞ்சிகை மற்றும் வாராந்த வெளியீடுகள்), இலத்திரனியல் (தொலைக்காட்சி மற்றும் வானொலி) மற்றும் இணைய ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலக ஊடகவியலாளர்களுக்காக இந்த அலுவலக ஊடகவியலாளர் **(Journalist)** அடையாள அட்டை வழங்கப்படுகின்றன.

II. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பந்தியின் பிரகாரம் உரிய விண்ணப்பதாரர்களின் புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

III. இங்கு ஒவ்வொரு வகை ஊடக நிறுவனங்களுக்கும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பொருந்தும்.

**அ) பத்திரிகை, சஞ்சிகை மற்றும் வாராந்த வெளியீட்டு நிறுவனங்கள்**

- ஊடக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கின்ற பத்திரிகை/ சஞ்சிகை/ வாராந்த வெளியீடுகள் தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் வகையில், ஊடக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கின்ற திகதி முதல் முன்னைய 06 மாத காலங்கள் வரை பிரசுரிக்கப்பட்ட பிரதிகள் (தேவைப்பாட்டிற்கு இணங்க மாத்திரம்) மற்றும் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
- ஊடக அடையாள அட்டைக்காக சமர்ப்பிக்கின்ற அனைத்து பத்திரிகை/ சஞ்சிகை/ வாராந்த வெளியீடுகளுக்கு இலங்கை பத்திரிகைப் பேரவையில் பதிவு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

- யாதேனுமொரு பத்திரிகையுடன் வெளியிடப்படுகின்ற மேலதிக வெளியீடுகள் வேறு பத்திரிகையாக கருதப்படாது என்பதுடன், அவ்வாறான விண்ணப்பப் படிவங்கள் பிரதான பத்திரிகையின் பெயரில் மாத்திரமே முன்வைக்கப்பட வேண்டும். (ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது பிரதான பத்திரிகைகளின் பெயருக்கேயன்றி மேலதிக வெளியீடுகளின் பெயரிற்கல்ல)

- மாதாந்த வார வெளியீடுகளுக்காக ஆகக் குறைந்தது 03 ஊடக அடையாள அட்டைகளும், இரண்டு மாத காலங்களுக்கான வார வெளியீடுகளுக்காக ஆகக் குறைந்தது 02 அடையாள அட்டைகளும் மற்றும் மூன்று மாத காலங்களுக்கான வார வெளியீடுகளுக்காக ஆகக் குறைந்தது 01 அடையாள அட்டை மாத்திரம் வழங்கப்படும். ஆறு மாத காலம் அல்லது வருடாந்த வார வெளியீடுகள்/ சஞ்சிகைகள் போன்றவற்றிற்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.

- பல்வேறு விடயங்களுக்கான துறைகளுக்குப் பொருத்தமாக வெளியிடப்படுகின்ற கையேடுகள் (Handbooks) அல்லது செய்திகள், நடப்பு ரீதியான தகவல்களிலிருந்து நீங்கிய வெளியீடுகளின் தொழில்துறையினர்களுக்காக இந்த ஊடக அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.

**ஆ) இலத்திரனியல் (வானொலி மற்றும் தொலைக்காட்சி) ஊடக நிறுவனங்கள்**

- ஊடக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கின்ற வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் வெகுசன ஊடக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் இலத்திரனியல் ஒலி-ஒளிபரப்பு சேவைக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் பிரதிகள் நிறுவனத் தலைவரினால் பெயர், கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தி முன்வைக்க வேண்டும்.

- வாரத்திற்கு ஆகக் குறைந்தது செய்தி மற்றும் நடப்பு விவகார நிகழ்ச்சிகள் 05 அல்லது ஒலி-ஒளிபரப்புச் செய்கின்ற கேபல் தொலைக்காட்சி (Cable TV) நிறுவனம், செய்மதி தொலைக்காட்சி (Satellite TV) நிறுவனம் மற்றும் இணைய அடிப்படையலான தொலைக்காட்சி (IPTV) நிறுவனங்களின் செய்திப் பிரிவு ஊடகவியலாளர்களுக்காக மாத்திரம் (ஆகக் குறைந்தது 10 இற்கு உட்பட்டதாக) ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. இங்கு குறித்த நிறுவனம் தமது அலைவரிசையின் நிகழ்ச்சி தொடர்பான விபரத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

- அவ்வாறே, ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கின்ற கேபல் தொலைக்காட்சி (Cable TV) நிறுவனம், செய்மதி தொலைக்காட்சி (Satellite TV) நிறுவனம் மற்றும் இணைய அடிப்படையலான தொலைக்காட்சி (IPTV) நிறுவனங்கள், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு மற்றும் வெகுசன விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் இலத்திரனியல் ஒலி-ஒளிபரப்புச் சேவைக்காக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களின் பிரதிகள் நிறுவனத்தின் அலுவலக அதிகாரியினால் பெயர், கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தி முன்வைக்கப்படல் வேண்டும்.

**இ) இணைய ஊடக நிறுவனங்கள்**

- செய்தி அறிக்கையிடலை அடிப்படையாக் கொண்ட இணையத் தளங்களின் ஊடகவியலாளர்களுக்காக மாத்திரம் ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

- வெகுசன ஊடக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் 2025ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்ட, செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களை அறிக்கைப்படுத்துகின்ற இணையத் தளங்களில் பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் (இணைய தலைவர்/ இணைய நிருவாகி/ உரிமையாளர்/ நிருவாகப் பணிப்பாளர் போன்ற வெளியகப் பதவிகளுக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.) வெகுசன ஊடக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் வழங்கப்படுகின்ற பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- ஊடக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கின்ற அனைத்து செய்தி இணையத் தளங்களும் ஊடக நிறுவனமாக வர்த்தக பதிவினை (Business Registration) பெற்றிருத்தல் வேண்டும். (வர்த்தகப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று நிறுவனத்தின் தலைவரின் பெயர், கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தி முன்வைக்கபடல் வேண்டும்.)

- ஊடக அடையாள அட்டையை வழங்குகின்ற போது குறித்த இணையத் தளத்தின் செயற்பாடு, நோக்கம், வாசகர்களின் எண்ணிக்கை, நாளாந்தம் மேம்படுத்தல் (Update) மற்றும் வேறு குறித்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

- ஊடக அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக ஆகக் குறைந்தது ஆறு மாத காலங்கள், நாளாந்தம் மற்றும் தொடர்ச்சியாக மேம்படுத்தல் (Update) செய்யப்பட்ட இணையத் தளங்கள் மாத்திரமே இதற்கான தகைமையைப் பெறுவதுடன், இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படுகின்ற அறிக்கையிடல்களில் ஆகக் குறைந்தது 50% உள்ளடக்கங்கள் செய்தி மற்றும் நடப்பு விவகாரம் குறித்த தகவல்களாக இருத்தல் வேண்டும்.

- ஒரு இணையத் தளத்திற்கு ஒரு ஊடக மொழிக்கு ஆகக் குறைந்தது 02 அடையாள அட்டைகளே வழங்கப்படும்.

- ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக இணைய ஊடகவியலாளர்கள் சமர்ப்பிக்கின்ற யாதேனுமொரு விண்ணப்பப் படிவம் தொடர்பில், தொடர்ந்தும் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது என அறியப்படும் சந்தர்ப்பத்தில் அந்த விண்ணப்பப் படிவம் குறித்த பிரிவிற்கு அனுப்பப்பட்டு, அறிக்கையைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு மாத்திரமே அடையாள அட்டை வழங்கப்படும்.

- அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்கள் உள்ளடங்களாக அரசாங்க நிறுவனங்களுக்கு உரியதான நிறுவன இணையத் தளங்களில் பணியாற்றுகின்ற தொழில்துறையினர்களுக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.

**(ஈ) வெளிநாட்டு ஊடக நிறுவனங்கள்**

- சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு ஊடக நிறுவனங்களில் இலங்கைப் பிரதிநிதிகள்/ நிருபர்களாக அந்த நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டு, நிரந்தரமாக குறித்த ஊடக நிறுவனத்தில் பணியாற்றுகின்ற அலுவலக ஊடகவியலாளர்களுக்காக மாத்திரம் ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

- விண்ணப்பதாரியினால் வழங்கப்படுகின்ற தகவல்கள், குறித்த வெளிநாட்டு ஊடக நிறுவனத்தினால் தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே அடையாள அட்டை வழங்கப்படும்.

- விண்ணப்பதாரி தமது ஊடக நிறுவனத்தில் பணியாற்றுவதாக குறித்த வெளிநாட்டு ஊடக நிறுவனத் தலைவரிடமிருந்து வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழை விண்ணப்பத்துடன் கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கின்ற யாதேனுமொரு விண்ணப்பப் படிவம் தொடர்பில், தொடர்ந்தும் தகவல்கள் உறுதிப் படுத்தப்படல் அவசியம் என்று கருதும் சந்தர்ப்பத்தில், அந்த விண்ணப்பப் படிவம் குறித்த பிரிவிற்கு அனுப்பப்பட்டு, தேவையான அறிக்கைகள் பெற்றுக் கொண்டதன் பிற்பாடே ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

ஆ. பிரதேச ஊடகவியலாளர்கள் **(Provincial Journalist)**

I. 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி செல்லுபடியாகும் வன்னம் ஊடக அடையாள அட்டை ஏற்கனவே வழங்கப்பட்ட பிரதேச ஊடகவியலாளர்கள் தவிர்ந்த ஏனைய பிரதேச ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் 2025ஆம் ஆண்டுக்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க முடிடியும்.

II. இணைய ஊடக நிறுவனங்களுக்காக வழங்கப்படுகின்ற ஆகக் குறைந்த ஊடக அடையாள அட்டைகளின் எண்ணிக்கைக்குள் மாத்திரம் அந்த ஊடக நிறுவனங்களில் பிரதேச ஊடகவியலாளர்களுக்காக அடையாள அட்டை வழங்கப்படும்.

III. இந்த வகைகளின் கீழ் ஊடக அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கின்ற விண்ணப்பங்களுடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பந்தியின் பிரகாரம் குறித்த விண்ணப்பதாரியின் புகைப்படம் முன்வைக்க வேண்டும்.

IV. விண்ணப்பத்தினை அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச ஊடகவியலாளர் அடையாள அட்டை" என குறிப்பிடப்பட வேண்டும்.

இ. சுதந்திர ஊடகவியலாளர்கள் **(Freelance Journalist)**

I. ஆகக் குறைந்தது ஒரு வருட காலம் தொடர்ச்சியாக சுதந்திர ஊடகவியலாளராக தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அச்சு, இலத்திரனியல் அல்லது இணைய ஊடக நிறுவனமொன்றில் சேவையாற்றி இருக்க வேண்டும்.

II. சுதந்திர ஊடகவியலாளர் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கின்ற விண்ணப்பப் படிவத்துடன், தம்மால் செய்தி, சிறப்புக் கட்டுரை வழங்கப் படுகின்ற அல்லது நடப்பு விவாகர நிகழ்ச்சிகளுக்காக பங்களிப்புச் செய்கின்ற நிறுவனங்களிடையே ஆகக் குறைந்தது ஒரு நிறுவனத்திலிருந்தோ அல்லது குறிப்பிட்ட ஊடக நிறுவனத்திற்கு தொடர்ந்து செய்திகளை வழங்குகின்றதை உறுதிப்படுத்துவதற்காக அந்த நிறுவனத்தின் முகவரி அச்சிடப்பட்ட காகிதத் தாளில் (Letterhead) ஊடக நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரால் அவரது உத்தியோகபூர்வ முத்திரையிட்டு கையொப்பமிடப்பட்ட கடிதமொன்றினை சமர்ப்பித்தல்.

III. அவ்வாறே, அதனை உறுதி செய்வதற்காக வேண்டி, விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கின்ற திகதிக்கு முன்னைய ஆறு மாத காலத்தினுள் தனது பெயரில் வெளியிடப்பட்ட செய்திகள் மற்றும் நடப்பு விவாகரங்கள் தொடர்பிலான அறிக்கையிடல் சிறப்புக்கட்டுரை/ விசித்தரமான புகைப்படங்கள் போன்றவை ஆகக் குறைந்தது பன்னிரண்டிற்குக் குறையாத எண்ணிக்கையில், உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் அல்லது இருவட்டுக்கள் போன்றவற்றை முன்வைக்க முடியும்

IV. இணைய ஊடக நிறுவனங்களுக்காக வழங்கப்படுகின்ற ஆகக் குறைந்த ஊடக அடையாள அட்டை எண்ணிக்கைக்கு இணங்க மாத்திரம் இணைய ஊடக நிறுவனங்களுக்காக சுதந்திர ஊடகவியலாளர் (Freelance Journalist) அடையாள அட்டை வழங்கப்படும்.

V. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப் படுகின்ற விண்ணப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பந்தியின் பிரகாரம் உரிய விண்ணப்பதாரர்களின் புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஈ. வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் - தற்காலிகம் **(Foreign Journalist – Temporary)**

I. செய்தி மற்றும் நடப்பு விவகார முக்கியத்துவம் வாய்ந்த விசேட சந்தர்ப்பங்களின் போது செய்தி சேகரிப்பு, கட்டுரைகளை வழங்குதல் மற்றும் செய்திப் பெறுமதி வாய்ந்த அறிக்கை நிகழ்ச்சிகள் தயாரிப்பிற்காக இலங்கைக்கு வருகை தருகின்ற வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு "வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் - தற்காலிகம்" ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

II. விண்ணப்பதாரியினால் தனது விண்ணப்பப் படிவத்துடன், தான் பணியாற்றுகின்ற வெளிநாட்டு ஊடக நிறுவனத்தின் தலைவரினால் வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழ் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தினை முன்வைக்க வேண்டும்.

III. விண்ணப்பதாரி தமது செல்லுபடியான வெளிநாட்டு பிரயாணக் கடவுச்சீட்டு மற்றும் அந்த கடவுச்சீட்டில் உரிமையாளரின் தனிப்பட்ட தகவல்கள் உள்ளடக்கிய பகுதியின் நிழற்படப் பிரதியொன்றும் விண்ணப்பப் படிவத்துடன் சமரப்பிக்க வேண்டும்.

IV. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப் படுகின்ற விண்ணப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பந்தியின் பிரகாரம் உரிய விண்ணப்பதாரர்களின் புகைப்படங்கள் முன்வைக்கப்பட வேண்டும். அத்துடன், வெளிநாட்டுக் கடவுச்சீட்டின் பிரதி ஒன்றும் இதற்காக முன்வைக்கப்பட வேண்டும்.

**உ. ஊடக நிர்வாகி (Media Administrator)**

I. தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊடக நிறுவனத்தில் ஊடக நிர்வாகத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்கின்ற ஊடக நிர்வாகிகளுக்கு (ஆகக் குறைந்தது ஒரு ஊடக நிறுவனத்தில் மூவருக்கு மாத்திரம்) இந்த ஊடக நிர்வாகி அடையாள அட்டை வழங்கப்பகின்றன.

II. ஊடக நிறுவனங்களில் விற்பனை மேம்பாட்டு பணிப்பாளர்/ முகாமையாளர்/ நலன்புரி அதிகாரி அல்லது விற்பனை மேம்பாட்டு துறையில் ஈடுபடுகின்ற அதிகாரிகளுக்காக இந்த அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.

III. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப் படுகின்ற விண்ணப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பந்தியின் பிரகாரம் உரிய விண்ணப்பதாரர்களின் புகைப்படங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

**ஊ. தொழில்நுட்பக் கலைஞர்கள் (Technical)**

I. இலத்திரனியல் ஊடக நிறுவனங்களில் துறைசார் ஊடக செய்தி சேகரிப்பின் போது நேரடியாக ஈடுபடுகின்ற தொழில்நுட்பக் கலைஞர்களுக்காக இந்த அடையாள அட்டை வழங்கப்படுகின்றன.

II. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப் படுகின்ற விண்ணப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பந்தியின் பிரகாரம் உரிய விண்ணப்பதாரர்களின் புகைப்படங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

**எ. ஊடக சேவை (Media Service)**

I. ஊடக நிறுவனங்களில் செய்தி மற்றும் நடப்பு விவகார பிரிவுகளின் நியதியின் படி துறைசார் ஊடக செய்தி சேகரிப்பின் போது நேரடியாக பங்களிப்புச் செய்கின்ற ஊடகப் பணிகளுக்குரியதான பதவிகளை உடையவர்களுக்காக இந்த ஊடக சேவை அடையாள அட்டை வழங்கப்படுகின்றன.

II. இந்த வகைப்படுத்தலின் கீழ் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப் படுகின்ற விண்ணப்பப்படிவத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 02. VII பந்தியின் பிரகாரம் உரிய விண்ணப்பதாரர்களின் புகைப்படங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

**04. பொது நிபந்தனைகள்**

I. ஊடக அடையாள அட்டை ஊடகப் பணிகளுக்காக மாத்திரம் பிரயோகிக்கப்பட வேண்டும். துஷ்பிரயோகம் அல்லது ஊடக நெறிமுறைகளுக்கு முரணான நடவடிக்கைகள் பதிவாகும் பட்சத்தில் ஊடக அடையாள அட்டையை இரத்து செய்யவோ அல்லது ஊடக அடையாள அட்டையை மீண்டும் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு வழங்க உத்தரவிடவோ அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

II. 2025ஆம் ஆண்டிற்கான ஊடக அடையாள அட்டைகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 2025 மார்ச் 31ஆந் திகதியன்று முடிவடையும். அதன் பிறகு, கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் முழுமையடையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

III. விண்ணப்பப் படிவங்களை www.dgi.gov.lk அல்லது www.news.lk என்ற இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க

தகவல் திணைக்களம், இலக்கம் 163, கிருலப்பன மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது நேரடியாகவும் வழங்க முடியும்.

IV. காணாமல் போன ஊடக அடையாள அட்டைக்கு பதிலாக தொடர்புடைய ஆண்டிற்கான புதிய ஊடக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது, சம்பந்தப்பட்ட ஊடக அடையாள அட்டை காணாமல் போனதற்கான பொலிஸ் முறைப்பாட்டின் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.

V. தனிப்பட்ட நலனுக்காக ஊடக அடையாள அட்டைகளை தவறாகப் பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால், அது தொடர்பாக ஆராய்ந்து சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களின் ஊடக அடையாள அட்டைகளை இரத்து செய்யும் முழு அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

VI. ஊடக அடையாள அட்டைகளை வழங்குவதற்கான இறுதித் தீர்மானம், மேற்கூறிய நிபந்தனைகள் மற்றும் தேவைகளை அவ்வப்போது மாற்றுவதற்கான அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கே உரித்தானது.

**எச்.எஸ்.கே.ஜே. பண்டார,**
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

EOG 12-0057